மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாயம்/
முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.

**முன்னிலை : திரு.M. செல்வம், M.L.,**
முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, (மு.கூ.பொ)
இராணிப்பேட்டை மாவட்டம்.
2024 ஆம் வருடம் அக்டோபர் திங்கள் 16 ஆம் நாள் புதன்கிழமை

மோ.வா.வி.இ.அசல் மனு எண்.303/2022
(CNR.No.TNVL120009172022)

1. ஷகிலா பேகம்
2. A. முகமது அஜ்மல் பாஷா
3. A. வசீம் பாஷா
4. இளவர் A. பமீனா பேகம்
5. இளவர் A. நிஜாமுதீன்

Minor petitioners 4 and 5 are represented by their mother and natural guardian, 1st petitioner.

6. A. நூருன்னிசா

.....மனுதாரர்கள்

//எதிர்//

1. R.காந்தி
2. G.தங்கமணி

.......எதிர்மனுதாரர்கள்.

இம்மனுவானது என்முன்பாக இறுதி விசாரணைக்கு 20.09.2024 அன்று கொண்டுவரப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.முகமது அலி, அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், மனுதாரர்கள் தரப்பு வாதுரைகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

கடந்த 08.06.2022 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் இறந்த 1ம் மனுதாரரின் கணவரும், 2 முதல் 5 மனுதார்களின் தந்தையும், 6ம் மனுதாரரின் மகனுமான அன்வர் பாஷா என்பவருக்கு இழப்பீடாக எதிர்மனுதார்கள் ரூ.50,00,000/- வழங்கக்கோரி மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166ன் கீழ் இம்மனு மனுதார்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :-</u>**

1ம் மனுதாரர் இறந்து போன அன்வர் பாஷாவின் மனைவி, 2, 3 மற்றும் 5 மனுதாரர்கள் மேற்படி அன்வர் பாஷாவின் மகன்கள், 4ம் மனுதாரர் அன்வர் பாஷாவின் மகள் மற்றும் 6ம் மனுதாரர் அன்வர் பாஷாவின் தாயார் ஆவார். 08.06.2022 ஆம் தேதி 19.00 மணிக்கு சென்னை - பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை, மேல்விஷாரம் கே.எச்.அப்போலோ மருத்துவமனை எதிரில், இடதுபுற சாலை ஓரமாக அன்வர் பாஷா நின்று கொண்டிருந்தபோது, 1ம் எதிர்மனுதாரருக்கு உரிமையான TN-83-T-1380 என்ற பதிவு எண்கொண்ட இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுனரான 2ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் கிழக்கிலிருந்து மேற்காக ஓட்டிவந்து அன்வர் பாஷா மீது மோதி கொடுங்காயங்கள் ஏற்படுத்தியதால் உடனடியாக மேல்விஷாரம் கே.எச்.அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு பின்னர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார். ஆற்காடு நகர காவல் நிலைய போலீசார் 2ம் எதிர்மனுதாரர் மீது இ.த.ச.பிரிவுகள் 279 மற்றும் 304(ஏ)ன் கீழ் வழக்கு பதிவு செய்து

ஆற்காடு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது. 2ம் எதிர்மனுதாரரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டு அன்வர் பாஷா இறந்துள்ளதால் 1, 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ தனித்தனியாகவோ மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்கவேண்டும்.

3. **இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் :–**

1. 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN–83–T–1380 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுனரான 2ம் எதிர்மனுதாரர் வேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினாரா?
2. மனுதாரர்கள் இழப்பீட்டு தொகை பெற தகுதியுடையவர்களா? யாரிடமிருந்து எவ்வளவு தொகை பெற தகுதியுடையவர்கள்?

4. மனுதார்கள் தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2 விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. **பிரச்சனை எண்.1 :–**

முதல் மனுதாரரான ம.சா.1 ஷகிலா பேகம் தனது சாட்சியத்தில், கடந்த 08.06.2022 அன்று இரவு சுமார் 7.00 மணியளவில் தனது கணவர் அன்வர் பாஷா, பெங்களூர் – சென்னை நெடுஞ்சாலை, விஷாரம் கே.எச்.அப்பலோ மருத்துவமனை சாலையின் ஓரம் இடது பக்கத்தில் நின்று கொண்டிருந்தபோது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்த TN–83–T–1380 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுனரான 2ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் மற்றும் போக்குவரத்து விதிகளை கடைபிடிக்காமலும் ஓட்டி வந்து தன் கணவர் மீது

மோதியதில், தன் கணவரின் உடலின் பல பாகங்களில் கொடுங்காயங்கள் ஏற்பட்டு, விஷாரம் கே.எச்.அப்பலோ மருத்துவமனையில் முதல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, பின்பு வேலூர் அடுக்கம்பாறை அரசு பொது மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும், விபத்தானது TN–83–T–1380 என்ற பதிவு எண்கொண்ட இருசக்கர வாகன ஓட்டுனரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்று சாட்சியம் அளித்து, முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் ம.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளனர்.

7. மேற்படி விபத்தினை கண்ணுற்ற சாட்சி ம.சா.2 திரு.முபாரக் பாஷா, மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN–83–T–1380 என்ற பதிவு எண் கொண்ட வாகன ஓட்டுனரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ளார். ம.சா.1, ம.சா.2 ன் சாட்சியங்கள் மற்றும் ம.சா.ஆ.1, ம.சா.ஆ.5 ஆகியவற்றின் அடிப்படையில், 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN–83–T–1380 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் ஓட்டுனரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது தெளிவாகிறது. எதிர்மனுதாரர்கள் தரப்பில், நீதிமன்றத்தில் ஆஜராகி யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று எவ்வித சாட்சியமும் முன்னிலைப்படுத்த வில்லை. இந்த சூழ்நிலையில் ம.சா.1, ம.சா.2ன் சாட்சியம் மற்றும் ம.சா.ஆ.1,

ம.சா.ஆ.5 ஆகியவற்றினை கருத்தில் கொண்டு 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN-83-T-1380 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுனரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் விபத்து ஏற்பட்டது என்று பிரச்சனை எண்.1க்கு தீர்வு காணப்படுகிறது.

8. பிரச்சனை எண்.2

1ம் எதிர்மனுதாரருக்கு உரிமையான TN-83-T-1380 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனம் எந்தவொரு காப்பீட்டு நிறுவனத்திலும் காப்பீடு செய்யப்பட்டுள்ளதாக மனுவில் தெரிவிக்கப்படவில்லை. அவ்வாறே ம.சா.ஆ.5 TN-83-T-1380 என்ற பதிவு எண்கொண்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கை மூலம் விபத்து சமயத்தில் மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டிய ஓட்டுனரான 2ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதையும் மேற்படி இருசக்கர வாகனம் காப்பீடு செய்யப்படவில்லை என்பதையும் அறியமுடிகிறது. இந்த நிலையில், 1ம் எதிர்மனுதாரருக்கு உரிமையான TN-83-T-1380 என்ற பதிவு எண்கொண்ட வாகனத்தை அதன் ஓட்டுனர் அஜாக்கிரதையாக, கவனக்குறைவாக ஓட்டி விபத்தை ஏற்படுத்தியதாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்களுக்கு வழங்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ள இழப்பீட்டை மேற்படி இருசக்கர வாகனத்தின் உரிமையாளரான 1ம் எதிர்மனுதாரர் வழங்கவேண்டும் என்று பிரச்சனை எண்.2க்கு தீர்வு காணப்படுகிறது.

9. ம.சா.1ன் சாட்சியத்திலிருந்தும், பிரேத பரிசோதனை சான்று ம.சா.ஆ.2 மற்றும் இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.3ல் இருந்தும் 2 முதல் 5 மனுதாரர்களின் தந்தை, 6ம் மனுதாரரின் மகன் அன்வர் பாஷா சாலை விபத்தினால் இறந்துள்ளார் என்பது தெளிவாகிறது. மனுதாரர்கள்

இறந்தவரின் வாரிசுகள் என்று நிரூபணம் செய்வதற்கு ம.சா.ஆ.4 வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதான மனுவில் மனுதாரர்கள் விபத்தின் போது இறந்தவரின் வயது 57 என்று குறிப்பிட்டுள்ளனர். ம.சா.ஆ.2 பிரேத பரிசோதனை சான்று மற்றும் ம.சா.ஆ.3 இறப்பு சான்று ஆகியவற்றில் விபத்தில் இறந்தவரின் வயது 57 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.6 விபத்தில் இறந்த அன்வர் பாஷாவின், முன்னாள் படைவீரர் அடையாள அட்டையில் அவரின் பிறந்த தேதி 12.09.1965 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே ம.சா.ஆ.6 முன்னாள் படைவீரர் அடையாள அட்டையில் குறிப்பிட்டுள்ள அன்வர் பாஷாவின் பிறந்த தேதியிலிருந்து, விபத்து சமயத்தில் அன்வர் பாஷாவின் வயதை கணக்கிட 56 வருடம், 8 மாதம், 26 நாட்கள் ஆகிறது. ம.சா.ஆ.6 ன் படி விபத்தில் இறந்த அன்வர் பாஷாவின் வயது 56 என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10. ம.சா.1 தனது சாட்சியத்தில் விபத்திற்கு முன்பு தனது கணவர் தனியார் வங்கியில் செக்யூரிட்டியாக வேலை செய்து மாதம் ரூ.50,000/- சம்பாதித்து வந்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அவற்றை நிரூபணம் செய்வதற்காக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கு விபத்து 08.06.2022 ல் நடந்துள்ளது, 22.02.2019 ல் நடந்த விபத்தில், நமது மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் CMA.No.1357/2024 புஷ்பா மற்றும் இருவர் எதிர் தர்மலிங்கம் மற்றும் ஒருவர் வழக்கில் 20.06.2024 ல் வழங்கிய தீர்ப்பில் Notional Income ரூ.12,500/- என முடிவு செய்துள்ளது. அதன் அடிப்படையில் இம்மனுவிலும் இறந்தவரின் வயதை கருத்தில் கொண்டு இறந்தவரின் மாத வருமானம் ரூ.12,500/- ஆக நிர்ணயித்து

**National Insurance Company Ltd., vs. Pranay Sethi and others reported in 2017(2) TNMAC Page 609(SC)** தீர்ப்பின் படி எதிர்கால வாழ்வாதாரத்திற்காக 10% சேர்த்து ரூ.12,500/- + ரூ.1,250/- = ரூ.13,750/- என நிர்ணயிக்கப்படுகிறது. **Sarala Varma –Vs– Delhi Transport Corporation and another reported in 2009(2) TNMAC Page 1 (SC)** தீர்ப்பினை அனுசரித்து ஆறு மனுதாரர்கள் இறந்த நபரினை சார்ந்து வாழ்ந்த நிலையில், இறந்தவரின் தனிப்பட்ட மற்றும் வாழ்க்கை செலவுகளுக்காக 1/4 கழித்து பிறகு இறந்தவரின் மாத வருமானம் ரூ.13,750 – ரூ.3,438 = ரூ.10,312/- என்று நிர்ணயிக்கப்படுகிறது. பெருக்கல் முறையை பயன்படுத்தி அன்வர் பாஷாவின் வயது 56 என்பதால் இறந்தவரின் வருமான இழப்பு ரூ.10,312/-x 12 x 9 = **ரூ.11,13,696/-** என்று நிர்ணயிக்கப்படுகிறது. **National Insurance Company Ltd., vs. Pranay Sethi and others reported in 2017(2) TNMAC Page 609(SC),** தீர்ப்பின்படி 1ம் மனுதாரர் தன் கணவரின் இழப்பிற்காக ரூ.40,000/-, மும் 2 முதல் 5 மனுதாரர்கள் அவர்களின் தந்தையின் பாசம், அன்பு இழந்ததற்காக தலா ரூ.40,000/- மும், 6ம் மனுதாரர் அவரின் மகனின் பாசம், அன்பு இழந்ததற்காக ரூ.40,000/-மும், சொத்து இழப்பிற்காக ரூ.15,000/- மும், இறுதி காரியங்களுக்காக ரூ.15,000/- மும் மேற்படி தலைப்புகளின் கீழ் நிர்ணயித்து, மூன்று ஆண்டுகளில் மேலே கூறப்பட்ட தொகை 10% அதிகரிக்கப்பட வேண்டும். மேற்படி தீர்ப்பின் தேதியிலிருந்து இப்போது ஆறு ஆண்டுகள் காலம் கடந்துவிட்டது. எனவே 20 % அதிகரிக்கச் செய்யும் போது 1ம் மனுதாரர் தன் கணவரின் இழப்பிற்காக ரூ.48,000/-மும், 2 முதல் 5 மனுதாரர்கள் தந்தையின் பாசம், அன்பு இழந்ததற்காக தலா ரூ.48,000/- மும், 6ம் மனுதாரர் மகனின் பாசம், அன்பு இழந்ததற்காக

ரூ.48,000/– மும், சொத்து இழப்பிற்காக ரூ.18,000/– மும், இறுதி காரியங்களுக்காக ரூ.18,000/– மும் நிர்ணயிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | வருமான இழப்பிற்காக | ரூ. 11,13,696/– |
| 2. | சொத்து இழப்பிற்காக (Loss of estate) | ரூ. 18,000/– |
| 3. | 1ம் மனுதாரரின் தாம்பத்ய இழப்பிற்காக (Loss of Spousal Consortium) | ரூ. 48,000/– |
| 4. | 2 முதல் 5 மனுதாரர்களின் தந்தை இழப்பிற்காக (ரூ.48,000 x 4 = 1,92,000/–) | ரூ. 1,92,000/– |
| 5. | 6ம் மனுதாரரின் மகன் இழப்பிற்காக | ரூ. 48,000/– |
| 6. | இறுதி காரியங்களுக்காக | ரூ. 18,000/–<br>------------------ |
| | மொத்தம் | ரூ. 14,37,696/–<br>------------------ |

முடிவில், இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்களுக்கு 1ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகையாக **ரூ.14,37,696/–** (ரூபாய் பதினான்கு லட்சத்து முப்பத்தி ஏழாயிரத்து அறுநூற்று தொண்ணூற்றாறு மட்டும்) யை மனு தேதி முதல் தொகை முழுவதும் செலுத்தும் காலம் வரை மனுதாரர்களின் தவறுகை காலம் இருப்பின் அதனை நீக்கி 7.5% வட்டியுடனும், மனு செலவுத்தொகையுடன் செலுத்த வேண்டுமென்றும், மேற்படி இழப்பீட்டு தொகையினை 1ம் எதிர்மனுதாரர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் மோட்டார் வாகன இழப்பீட்டு கோரிக்கை தீர்ப்பாயர்/முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, இராணிப்பேட்டை என்ற பெயரில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, வாலாஜா கிளை வங்கி கணக்கு **எண்.42816935163 (IFSC Code**

**SBIN0000775)**ல் வைப்பீடு செய்யவேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகையில் 1ம் மனுதாரருக்கு ரூ.5,37,696/-ம், 2, 3 மனுதாரர்கள் மற்றும் 4, 5 இளவர் மனுதார்களுக்கு தலா ரூ.2,00,000/-ம், 6ம் மனுதாரருக்கு ரூ.1,00,000/-ம் கிடைக்கத்தக்கது என்றும், 1 முதல் 3 மற்றும் 6 மனுதாரர்கள் அவரவர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகைக்குரிய வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் பெற்றுக் கொள்ளலாம் என்றும், 4, 5 இளவர் மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையினை அவர்கள் மேஜர் ஆகும் வரை ஏதாவது ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் வைப்பீடு செய்யப்பட வேண்டும் என்றும் வைப்பீட்டு தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியை 4, 5 இளவர் மனுதாரர்களின் பாதுகாவலரான 1ம் மனுதாரர், அவர்களது நன்மைக்காக 3 மாதத்திற்கு ஒரு முறை பெற்றுக்கொள்ளலாம் என்றும் 4, 5 மனுதாரர்கள் மேஜர் ஆனவுடன் மனுதாக்கல் செய்து அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டு தொகையினை அவர்களது வங்கி கணக்கில் பெற்றுக்கொள்ளலாம் என்றும், மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகைக்கான பாக்கி நீதிமன்ற கட்டணம் **ரூ.13,730/-** மனுதாரர்கள் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 10 நாட்களுக்குள் செலுத்தவேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் நீதிமன்ற கட்டணம் செலுத்தும் தேதி வரை இழப்பீட்டுத் தொகைக்கான பின்வட்டி மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கறிஞர் ஊதியம் **ரூ.33,877/-** என்றும், மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை அவரவர்கள் வங்கிக் கணக்கில் நேரிடையாக NEFT/RTGS மூலம் வழங்கப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. 2ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு பின்னர் 2024 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 ஆம் நாள் புதன்கிழமை திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்படுகிறது.

(ஒம்) M. செல்வம்
மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு கோரிக்கை தீர்ப்பாயர்/
முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, (மு.கூ.பொ)
இராணிப்பேட்டை.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| ம.சா.1 | திருமதி.ஷகிலா பேகம் (1ம் மனுதாரர்) |
| ம.சா.2 | திரு.முபாரக் பாஷா |

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 08.06.2022 | முதல் தகவல் அறிக்கை நகல். |
| ம.சா.ஆ.2 | 09.06.2022 | அன்வர் பாஷாவின் பிரேத பரிசோதனை சான்று நகல். |
| ம.சா.ஆ.3 | 29.06.2022 | அன்வர் பாஷாவின் இறப்பு சான்று. |
| ம.சா.ஆ.4 | 26.07.2022 | வாரிசு சான்று நகல். |
| ம.சா.ஆ.5 | 02.08.2022 | TN–83–T–1380 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன அறிக்கை நகல். |
| ம.சா.ஆ.6 | ----- | இறந்துபோன அன்வர் பாஷாவின் அடையாள அட்டை நகல். |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :** இல்லை.

(ஒம்) M. செல்வம்
மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு கோரிக்கை தீர்ப்பாயர்/
முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, (மு.கூ.பொ)
இராணிப்பேட்டை.